بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

எப்போது வேண்டுமென்றாலும் உலகம் அதில் விழுந்து விடுகின்ற நிலைமை ஏற்படலாம். அது போன்ற நேரத்தில் உலகத்தை அந்த நெருப்பின் கிடங்கில் விழுவதிலிருந்து பாதுகாப்பது மற்றும் அமைதியை நிலைநாட்டுகின்ற பணிகளை அஹ்மதிகளால் மட்டுமே செய்ய முடியும்.

*அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்*

*(அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)*

*அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 11.12.2015 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்*

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

இஸ்லாத்தின் போதனைகளில் ஜிஹாது மற்றும் வேறு சில கட்டளைகள் உள்ளன. அதன் காரணமாகவே முஸ்லிம்கள் தீவிரவாதிகளாக ஆகி வருகின்றனர் என்று கடந்த நாட்களில் பத்திரிகைகளில் கட்டுரை எழுதக்கூடிய ஒரு நபரும் ஆஸ்திரேலியாவைச் சார்ந்த அரசியல்வாதி ஒருவரும் கூறியுள்ளனர். இஸ்லாத்தில் தீவிரவாதத்திற்கான போதனை ஏதாவதொரு வகையில் இருக்கத்தான் செய்கின்றது. மேலும் கடினத்திற்கான போதனையும் உள்ளது. எனவே தான் முஸ்லிம்களுக்கு தீவிரவாதத்தின் பக்கம் கவனம் இருக்கின்றது என்று யூ.கே வைச் சார்ந்த ஆட்சியிலுள்ள அரசியல்வாதி ஒருவரும் கடந்த நாட்களில் கூறியிருந்தார்.

கூறுகின்ற சிலர் இவ்வாறும் கூறுகின்றனர். எழுதுகின்ற சிலர் இவ்வாறும் எழுதுகின்றனர். அதாவது மற்ற மார்க்கங்களின் போதனைகளிலும் கடினம் உள்ளது என்பது உண்மை தான். ஆனால் அந்த மார்க்கங்களைப் பின்பற்றக் கூடியவர்கள் அதன்படி அமல் செய்வதில்லை. அல்லது தமது மார்க்கங்களில் சூழ்நிலைக்கேற்ப மாற்றங்களை செய்து கொண்டனர். காலத்தின் தேவைக்கேற்ப அந்த போதனைகளை மாற்றிக் கொண்டனர். எனவே, திருக்குர்ஆனையும் காலத்தின் தேவைக்கேற்ப அதன் கட்டளைகளை மாற்றிக் கொள்ள வேண்டும் என அவர்கள் அழுத்தம் தருகின்றனர்.

எவ்வாறிருப்பினும், இவர்களின் இந்த கூற்றிலிருந்து இவ்விஷயம் நிரூபணமாகி விட்டது. அதாவது அவர்களின் கூற்றின்படி அவர்களின் மார்க்க போதனைகள் இறைவனால் அருளப்பட்ட போதனைகளாக தற்போது இல்லை. மாறாக, மனிதனால் உருவாக்கப்பட்ட போதனைகளாக ஆகிவிட்டது. இது நடைபெறவே இருந்தது. ஏனென்றால், இந்த போதனைகள் நிலைபெறும் அல்லது கியாமத் வரை அந்த போதனைகளின்படி செயல்படக் கூடியவர்கள் தோன்றுவார்கள் என்றும் இறைவன் எந்த வாக்குறுதியும் அளிக்கவில்லை. ஆனால் திருக்குர்ஆனில் அல்லாஹ் இந்த அறிவிப்பை செய்திருக்கின்றான்.

إِنَّا نَحْنُ نَزَّلْنَا الذِّكْرَ وَإِنَّا لَهُ لَحَافِظُونَ அதாவது இந்த திக்ரை திருக்குர்ஆனை நாமே இறக்கினோம். நாமே இதனை பாதுகாப்போம். அதன் பிறகு அவ்வேதத்தின் பாதுகாப்பிற்குரிய ஏற்பாட்டையும் இறைவன் செய்தான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் தனது பல்வேறு நூல்களில் இவ்வசனத்தில் விளக்கத்தையும் வழங்கியுள்ளார்கள்.

ஓரிடத்தில் அன்னார் கூறுகின்றார்கள்: அல்லாஹ்வின் நீண்ட காலமாக இருந்து வருகின்ற நடையாகும். அதாவது அவன் ஒரு சமுதாயத்தை ஒரு செயலிலிருந்து தடுக்கும் போது அந்த சமுதாயத்தின் இறை நியதி கண்டிப்பாக இவ்வாறு அமைகின்றது. அவர்களில் சிலர் அந்த செயலை கண்டிப்பாக செய்வார்கள். உதாரணமாக, நீங்கள் தவ்ராத் மற்றும் இறைவனின் ஏனைய வேதங்களில் மாற்றம் செய்யாதீர்கள் என்று யூதர்களை அல்லாஹ் தவ்ராத்தில் தடுத்திருந்தான். அந்த அடிப்படையில் அவர்களில் சிலர் தவ்ராத்தில் மாற்றங்களை செய்தனர். ஆனால் நீங்கள் திருக்குர்ஆனில் மாற்றம் செய்யாதீர்கள் என்று திருக்குர்ஆனில் எங்கும் கூறவில்லை. மாறாக, إِنَّا نَحْنُ نَزَّلْنَا الذِّكْرَ وَإِنَّا لَهُ لَحَافِظُونَ என்று இறைவன் கூறியுள்ளான்.

அடுத்து அன்னார் கூறுகின்றார்கள்: இவ்வசனம் தெளிவாக கூறுகின்றது. இந்த திக்ரை (திருக்குர்ஆனை) உலகிலிருந்து அழிப்பதற்கு விரும்பும் ஒரு சமுதாயம் தோன்றும் போது இறைவன் விண்ணிலிருந்து தனது ஒரு தூதர் மூலமாக அந்த வேதத்தை பாதுகாப்பான்.

ஆக, இந்த மக்கள் அவ்வப்போது திருக்குர்ஆனின் மீது ஆட்சேபனை செய்து இந்த வேதத்தை அழிக்க விரும்புகின்றனர். ஏனென்றால், அவர்களின் வேதம் ஒன்று அழிந்து விட்டது. அல்லது வெறும் புத்தகமாகவே மாறி விட்டது. இப்போது செய்தி அனுப்புவதற்கு Twitter, Whatsaap என்று பல்வேறு வழிமுறைகள் உள்ளன. கடந்த நாட்களில் அதில் ஒரு குறும்படம் ஓடிக் கொண்டிருந்தது. அதில் குர்ஆன் என்று வெளியே எழுதப்பட்டிருந்த ஒரு புத்தகத்திலிருந்து சில வசனங்களை இரண்டு இளைஞர்கள் மக்களுக்கு வாசித்துக் காட்டிக் கொண்டிருந்தார்கள். இது எப்படிப்பட்ட போதனை என்று பல்வேறு மக்களிடம் அது பற்றி கூறி நேர்காணல் செய்து கொண்டிருந்தார்கள். அந்த புத்தகத்தின் வெளியே திருக்குர்ஆன் என்று எழுதப்பட்டிருந்தது. அதை மட்டுமே பார்த்து ஒவ்வொரு நபரும் இஸ்லாத்தின் போதனையை குறை கூறிக் கொண்டே சென்றார். பாருங்கள் ! இதிலிருந்து நிரூபணமாகி விட்டது. இஸ்லாத்தின் போதனையே இப்படித்தான்

இருக்கின்றது. எனவே தான் முஸ்லிம்களும் தீய செயல்களில் ஈடுபடுகின்றனர் என்று கூறினர். கொஞ்ச நேரத்திற்குப் பிறகு அந்த இரண்டு இளைஞர்களும் அந்த புத்தகத்தின் மேலே இருந்த கவரை அகற்றி விட்டனர். மேலும் நீங்கள் படித்துக் கொண்டிருந்தது இஸ்லாத்தின் வேதமல்ல. இது பைபிள் ஆகும். பைபிளைத் தான் நீங்கள் படித்துக் கொண்டிருந்தீர்கள் என்று கூறினர். அதற்கெதிராக எவரும் எதுவும் பேசவில்லை. ஆனால் இஸ்லாத்தின் பெயர் வந்ததுமே உடனடியாக எதிர்மறையான விமர்சனங்கள் வந்து விடுகின்றன. அனைவரும் மவுனமாகி விட்டனர்.

ஆக, இது தான் இவர்களது நிலைமை. ஒரு முஸ்லிம் தவறான செயல் செய்தால் அதற்கு இஸ்லாத்தை பொறுப்பாக்கி விடுகின்றனர். மற்ற மார்க்கத்தை சார்ந்த ஒருவர் அதே செயலை செய்தால் பாவம் அறியாமல் செய்து விட்டார் என்றும் அல்லது அவரை பைத்தியம் என்றும் கூறி விடுகின்றனர். சில முஸ்லிம் பிரிவுகள் இஸ்லாத்தின் பெயரால் செய்கின்ற சில தவறான செயல்களே இஸ்லாத்தினை அவப்பெயருக்கு ஆளாக்கி உள்ளது என்பதை நாம் ஒப்புக் கொள்கின்றோம். ஆனால், அதற்காக திருக்குர்ஆனின் போதனைகளை இலக்காக்குவதும் அதில் வரம்பு மீறுவது என்பதும் இஸ்லாத்திற்கெதிரான உள்ளத்தின் பகைமை மற்றும் காழ்ப்புணர்ச்சியின் வெளிப்பாடாகும். இன்றைய நாட்களில் இதன் உச்சகட்ட வெளிப்பாடாக அமெரிக்க அதிபர் வேட்பாளரின் இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களுக்கெதிரான கூற்று அமைந்துள்ளது.

எவ்வாறிருப்பினும், இஸ்லாத்தைப் பற்றி இவர்கள் என்ன விரும்புகின்றார்களோ அதனை பேசிக் கொள்ளட்டும். ஆனால், இஸ்லாத்தின் அழகிய போதனைகளுக்கு எதிராக எந்த மார்க்கத்தின் போதனைகளும் போட்டி போட முடியாது. அதே போன்று இவர்களால் உருவாக்கப்பட்ட எந்த சட்டமும் போட்டி போட முடியாது. இவர்கள் கூறுகின்றனர். நாங்கள் காலத்திற்கேற்ப சட்டங்களை மாற்றிக் கொண்டோம். அல்லாஹ் தஆலா இக்காலத்திலும் தனது வாக்குறுதிக்கேற்ப திருக்குர்ஆனின் பாதுகாப்பிற்காக தனது தூதரை அனுப்பியுள்ளான். அன்னார் திருக்குர்ஆனின் அழகிய போதனைகளை நமக்கு கற்றுத் தந்துள்ளார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: திருக்குர்ஆனின் மற்றொரு பெயர் திக்ரு ஆகும். மனிதனின் இயல்பில் மறைந்திருந்த மற்றும் மறக்கப்பட்ட உண்மைகளை மற்றும் அமானிதங்களை நினைவூட்டுவதற்காக திருக்குர்ஆன் இறங்கியது. إِنَّا نَحْنُ نَزَّلْنَا الذِّكْرَ وَإِنَّا لَهُ لَحَافِظُونَ என்ற தனது உறுதியான வாக்குறுதிக்கேற்ப இக்காலத்திலும் விண்ணிலிருந்து ஆசிரியர் ஒருவர் தோன்றியுள்ளார். அவர் وَآخَرِينَ مِنْهُمْ لَمَّا يَلْحَقُوا بِهِمْ என்பதின் வெளிப்பாடாகவும் வாக்குறுதியாகவும் தோன்றியுள்ளார். அவர் தான் தற்போது உங்கள் மத்தியில் பேசிக் கொண்டிருக்கின்றார்.

அடுத்து அன்னார் கூறுகின்றார்கள்: அல்லாஹ் தனது வாக்குறுதிக்கேற்ப திருக்குர்ஆனின் மகத்துவத்தை நிலைநாட்டும் பொருட்டு 14 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் என்னை அனுப்பியுள்ளான். திருக்குர்ஆனின் ஆதரவுகளும் ஒத்தாசைகளும் எமக்கு சாதகமாக உள்ளன. இன்று இந்த சிறப்பு உலகின் வேறு எந்த மார்க்கத்தை பின்பற்றுபவருக்கும் கிடைக்கவில்லை.

ஆக, இரண்டு பிரிவினர் அல்லது இரண்டு நபர்கள் இஸ்லாம் வாளினால் பரவியது என்று வாதம் செய்கின்றனர். உண்மையில் அவர்கள் இஸ்லாத்தின் எதிர் சக்திகளின் கைக்கூலிகளாக இருக்கின்றனர். இந்த காலம் வாள் ஏந்தி ஜிஹாது செய்யக்கூடிய காலம் அல்ல என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு மிகத்தெளிவாக கூறி விட்டார்கள். இஸ்லாத்தின் ஆரம்ப காலகட்டத்தில் ஏற்பட்ட சில நிர்பந்தமான சூழ்நிலைகளில் தான் வாள் ஏந்தி ஜிஹாது செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டது. எதிரி இஸ்லாத்தை வாளின் சக்தி கொண்டு அழித்து விட விரும்பினான். இஸ்லாம் அமைதி மற்றும் அன்பின் போதனையினால் நிறைந்திருக்கின்றது. மேலும் முஸ்லிம்களிடமும் நீங்கள் ஒருவரையொருவர் கொலை செய்தல் மற்றும் பிரிவினைக்கு ஆளாகி இஸ்லாத்தினை அவப்பெயருக்கு ஆளாக்குகின்றீர்கள் என்று கூற வேண்டும். நம்மிடத்தில் போதுமான வாய்ப்பு வசதிகள் இல்லை தான். ஆனால் Press மற்றும் ஊடகம் வாயிலாக உலகின் ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு நகரத்திலும் எந்த அளவிற்கு இந்த பணியை செய்ய முடியுமோ அந்த அளவிற்கு செய்ய வேண்டும். தற்போது உலகத்திற்கு இஸ்லாத்தின் அழகிய வடிவத்தை காட்டிக் கொடுப்பது மிகவும் அவசியமாகும்.

கடந்த நாட்களில் இங்கு பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் கிளாஸ்க்கோ பகுதி M.P அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஆதாரத்தின் அடிப்படையில் இஸ்லாத்தின் உண்மைத்துவத்தை எடுத்துரைத்தார். இஸ்லாத்தின் அமைதி மற்றும் சாந்தியின் போதனையின்படி செயல்படக்கூடியவர்கள் அஹ்மதி முஸ்லிம்களாவர் என்று அவர் கூறினார். கிளாஸ்க்கோவில் அமைதி கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. அதில் அவர் கலந்து கொண்டிருந்தார். ஆக, அவரது கூற்றை கேட்டு அங்கு அமர்ந்திருந்த இங்கிலாந்து நாட்டின் உள்துறை அமைச்சரும் கூறினார். அஹ்மதிகள் எந்த இஸ்லாத்தை எடுத்துரைக்கின்றார்களோ அது மற்ற தீவிரவாத குழுக்கள் எடுத்துரைக்கின்ற இஸ்லாத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும். உண்மையில் அஹ்மதிகள் அமைதியை விரும்புகின்ற குடிமக்கள் ஆவர். உண்மையில் விஷயம் என்னவென்றால், அஹ்மதிகள் புதிதாக எந்த போதனையையும் எடுத்துரைக்கவில்லை. மாறாக, திருக்குர்ஆன்

கூறுகின்றவற்றையே எடுத்துரைக்கின்றனர். கடந்த நாட்களில் நான் ஜப்பானில் இருந்தேன். அப்போது அங்கு கல்வி அறிவு படைத்த மக்கள் இதனை வெளிப்படுத்தினார்கள். இன்னும் கூறப்போனால் ஒரு கிருத்தவ பாதிரியாரே கூறினார். திருக்குர்ஆனின் ஒளியில் இஸ்லாத்தின் போதனையாக எதனை நீங்கள் எடுத்து வைக்கின்றீர்களோ அதனை அறிந்து வைப்பது ஜப்பானியர்களுக்கு மிகவும் அவசியமாகும். இன்னும் கூறப்போனால் முழு உலகத்திற்கும் அதன் அவசியம் இருக்கின்றது. இப்போது இது ஜப்பான் ஜமாஅத்தின் கடமையாகும். அவர்கள் ஒருங்கிணைந்த திட்டம் வகுத்து இவ்விஷயத்தை பசுமையாக வைத்தல் வேண்டும்.

அதேபோன்று இங்கு இந்த யூ.கே நாட்டிலும், உலகத்தின் மற்ற நாடுகளிலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாக நாம் பெற்ற இஸ்லாத்தின் போதனைகளின் அழகிய ஞானத்தை பரப்ப வேண்டும்.

எனவே இக்காலத்தில் திருக்குர்ஆனின் பாதுகாப்பிற்குரிய பணியை அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாக செயல்படுத்தியுள்ளான். ஒவ்வொரு அஹ்மதியும் இதே பணியை செய்தல் வேண்டும். சமுதாயத்தின் ஒவ்வொரு மட்டத்திலும் ஒவ்வொரு பிரிவினருக்கும் இந்த தூதுச் செய்தியை கொண்டு சேர்க்க வேண்டும். எல்லா வகையிலும் இந்த பணியை செய்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் செய்த பைஅத்தின் உரிமையை முழுமைபடுத்த வேண்டும்.

இப்போது நான் இஸ்லாத்தின் அமைதியின் போதனையின் சிறப்புகளை பறைசாற்றும் சில உதாரணங்களை எடுத்துரைக்கின்றேன். அல்லாஹ் திருக்குர்ஆனில் ஓரிடத்தில் கூறுகின்றான். لَآ إِكْرَاهَ فِى ٱلدِّينِ அதாவது மார்க்கத்தில் பலவந்தமில்லை. மேலும் அல்லாஹ் கூறுகின்றான்.

لَءَامَنَ مَن فِى ٱلْأَرْضِ كُلُّهُمْ جَمِيعًا அதாவது உமது இறைவன் கட்டாயமாக விரும்பியிருந்தால் பூமியிலுள்ளவர்கள் அனைவருமே ஒன்றாக நம்பிக்கை கொண்டிருப்பர். எனவே இறைவனே கட்டாயப்படுத்தாதிருக்கும் போது மக்கள் நம்பிக்கை கொள்வதற்காக நீர் அவர்களை கட்டாயப்படுத்துவீரா. (10:99)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:

இஸ்லாம் ஒருபோதும் பலவந்தத்தை போதிக்கவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பார்த்து அல்லாஹ் கூறுகின்றான். لَءَامَنَ مَن فِى ٱلْأَرْضِ كُلُّهُمْ جَمِيعًا அதாவது உமது இறைவன் கட்டாயமாக விரும்பியிருந்தால் பூமியிலுள்ளவர்கள் அனைவருமே ஒன்றாக நம்பிக்கை கொண்டிருப்பர். ஆனால் அல்லாஹ்வோ விரும்பவில்லை. எனவே நபி (ஸல்) அவர்கள் விரும்பியிருந்த போதிலும் நீர் கூறுவதனால் அது நடந்து விடாது என்றே அல்லாஹ் கூறினான். எனவே இந்த விஷயத்தை எப்போதும் நினைவில் வைக்க வேண்டும். இஸ்லாத்தில் பலவந்தம் இல்லை என்பதை இந்தவொரு போதனையே தெளிவாக வெளிப்படுத்திக் காட்டுகின்றது. இஸ்லாம் ஒருபோதும் பலவந்தத்தை போதிக்கவில்லை என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்.

அடுத்து அன்னார் கூறுகின்றார்கள்: இஸ்லாமிய போர்கள் மூன்று வகைப்படும். அதாவது தன்னை பாதுகாத்துக் கொள்ள, தற்காப்பிற்காக. எதிரிகள் தாக்குதல் நடத்தினால் தற்காத்துக் கொள்ள வாள் ஏந்திக் கொள்ளலாம். அடுத்து தண்டனை அளிக்கும் விதமாக. கொலைக்குப் பகரமாக பழிவாங்குதல் அதாவது எவர் ஒருவரை கொலை செய்து விடுவாரோ அவருக்கு தண்டனை அளிப்பதற்காக. அதாவது போரின் சூழலில் ஆயுதம் ஏந்தி செயல்பட்டவர்களுக்கு அத்தண்டனை வழங்கப்படுகின்றது. அடுத்து சுதந்திரத்தை நிலைநாட்டுவதற்காக அதாவது முஸ்லிமாகி விட்டதன் காரணமாக மக்களை எவர்கள் கொலை செய்து வந்தார்களோ அவர்களை தடுத்து நிறுத்துவதற்காக. நீங்கள் ஏன் முஸ்லிம் ஆனீர்கள் என்று கூறி அவர்கள் மக்களை கொலை செய்து வந்தார்கள். நீங்கள் உங்களது மார்க்கத்தை மாற்றிக் கொண்டீர்கள். எனவே நாங்கள் உங்களை கொலை செய்கின்றோம் என்று கூறி வந்தார்கள். அப்போது அல்லாஹ் கூறினான். இவர்கள் முஸ்லிம்களை கொலை செய்து வருகின்றார்கள். எனவே இவர்களுக்கு எதிராக வாள் ஏந்துவது ஆகுமானதாகும். இந்த மூன்று காரணங்களைத் தவிர்த்து வேறெந்த விஷயங்களிலும் வாள் ஏந்துவது ஆகுமானதல்ல. மார்க்கத்தைப் பரப்புவதற்காக வாள் ஏந்தாதீர்கள் என்று திருக்குர்ஆனில் தெளிவான கட்டளை உள்ளது. மார்க்த்தின் தனிச்சிறப்புகளை முன்னிலைப்படுத்துங்கள். நல்ல முன்மாதிரிகளின் மூலமாக மக்களை உங்கள் பக்கம் கவருங்கள். ஆரம்ப காலகட்டத்தில் இஸ்லாத்தில் வாள் ஏந்துவதற்கு கட்டளை வழங்கப்பட்டது என்று எண்ணாதீர்கள். ஏனென்றால், மார்க்கத்தை பரப்புவதற்காக அந்த வாள் ஏந்தப்படவில்லை. மாறாக, எதிரியின் தாக்குதலிலிருந்து தங்களை தற்காத்துக் கொள்ள அல்லது அமைதியை நிலைநாட்டுவதற்காக வாள் ஏந்தப்பட்டது. மார்க்கத்திற்காக வாள் ஏந்துவது ஒருபோதும் அவர்களின் விருப்பமாக இருந்ததில்லை.

எவர்கள் முஸ்லிம்களாக இருந்து கொண்டு மார்க்கத்தை பரப்புவதற்காக வாளேந்த வேண்டும் என்று கூறுகின்றார்களோ அவர்கள் இஸ்லாத்தின் தனிச்சிறப்புகளை அறிந்திருக்கவில்லை.ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மார்க்கத்தின் தனிச்சிறப்புகளை முன்னிலைப்படுத்துங்கள் என்று நமக்கும் கவனமூட்டியுள்ளார்கள். அதைப்பற்றி நமக்கு ஞானம் இருக்கும் போது தான் அது முன்னிலைப்படுத்தப்படும். எனவே உங்களது அறிவை

அதிகரித்துக் கொள்ளுங்கள். அடுத்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: உங்களின் நல்ல முன்மாதிரியின் மூலமாக மக்களை உங்கள் பக்கம் கவருங்கள். நீங்கள் நல்ல முன்மாதிரியை வெளிப்படுத்துங்கள். அதனைக் கண்டு மக்கள் உங்கள் பக்கம் வந்து விடுவார்கள்.

எனவே இது ஒவ்வொரு அஹ்மதியின் மிகப்பெரிய பொறுப்பாகும். மார்க்கத்தின் தனிச்சிறப்புகளை முன்னிலைப்படுத்துவற்கு திருக்குர்ஆனின் ஞானத்தை பெற வேண்டும். பின்னர் அதில் தனது நல்ல முன்மாதிரியை நிலைநாட்டி உலகத்தை தன் பக்கம் ஈர்க்க வேண்டும். இந்த அறிவு மற்றும் அமல் மூலமாக மட்டும் தான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பைஅத்தில் வந்த பிறகு திருக்குர்ஆன் மற்றும் இஸ்லாத்தின் பாதுகாப்பு பணிகளில் நாம் பங்கு பெற முடியும். மேலும் உலகத்தில் அமைதியை நிலைநாட்டமுடியுமென்றால் திருக்குர்ஆனின் போதனைகளின் மூலமாகவே முடியும் என்றும் நம்மால் உலக மக்களுக்கு உணர்த்திட முடியும். திருக்குர்ஆனில் ஒரு இடத்தில் மார்க்கத்தை ஒப்புக் கொள்ளாதவர்களின் நிலையை இவ்வாறு படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளது. وَقَالُوٓاْ إِن نَّتَّبِعِ ٱلْهُدَىٰ مَعَكَ نُتَخَطَّفْ مِنْ أَرْضِنَآ (28:58) அதாவது மேலும் நாங்கள் உம்முடனுள்ள இந்த வழிகாட்டலை பின்பற்றினால் எங்கள் நாட்டிலிருந்து நாங்கள் பறிக்கப்பட்டு விடுவோம் என்று அவர்கள் கூறுகின்றனர். ஆக, இஸ்லாத்தின் போதனை அநீதியான போதனை என்று ஆட்சேபனை செய்யப்படவில்லை. மாறாக, நாங்கள் உமது அமைதி மற்றும் சாந்திக்கான இந்த மார்க்கத்தை ஒப்புக் கொண்டால் எங்களை சுற்றியுள்ள சமுதாயங்கள் எங்களை அழித்து விடும் என்று கூறியே ஒப்புக் கொள்ளாதவர்கள் ஆட்சேபனை செய்தனர்.

எனவே, இஸ்லாத்தின் போதனை நட்பை வளர்க்கின்ற போதனையாகும். சாந்தியை நிலைநிறுத்துகின்ற போதனையாகும். அமைதி மற்றும் அன்பின் தூதுச் செய்தியை வழங்கிட செய்யும் போதனையாகும். சில முஸ்லிம் பிரிவுகள் அதன்படி அமல் செய்யவில்லை என்றால் அது அவர்களின் துர்பாக்கியமாகும்.

இந்த மக்கள் தங்களின் நலனுக்காக புவிசார் அரசியல் நலனுக்காக குழப்பங்களை ஏற்படுத்தி இருக்கின்றார்கள். முஸ்லிம் நாடுகளில் ஏற்பட்டிருக்கின்ற குழப்பங்களிலும் சில முஸ்லிம் நாடுகளின் பங்கு உள்ளது. முஸ்லிம்களின் இந்த தீவிரவாத குழுக்கள் நமது நாடுகளால் உருவாக்கப்பட்டதாகும் என்று இப்போது மேற்கத்திய நாடகளின் ஊடகங்கள் கூட கூறத் தொடங்கி விட்டன. ஈராக் மற்றும் சிரியாவின் போருக்குப் பிறகு நாமே இந்த குழுக்களை உருவாக்கி இருக்கின்றோம் என்றும் கூறுகின்றனர். இதன் காரணமாக நான் இஸ்லாத்தின் பெயரால் முஸ்லிம்கள் என்று தங்களை கூறிக் கொண்டு தீவிரவாத செயல்களில் ஈடுபடும் முஸ்லிம்களை குற்றமற்றவர்கள் என்று கூறவில்லை. ஆனால், இந்த நெருப்பை மூட்டியதில் வல்லரசுகளின் பெரும் பங்கு இருக்கின்றது. இப்போதும் கூட ஒருபக்கம் தீவிரவாதிகளை ஒழிப்போம் என்று கூறப்படுகின்றது. அவர்கள் மீது குண்டுகள் வீசப்படுகின்றன. மற்றொரு பக்கம் அவர்களுக்கு ஆயுதம் கொடுப்பவர்கள் மற்றும் பொருளாதார உதவி செய்யக்கூடியவர்களை பற்றி அறிந்திருந்தும் கண்களை மூடிக் கொள்கின்றனர்.

ஆக, இஸ்லாத்தின் போதனைகளுக்கு எதிராக செயல்பட்டு அநீதி இழைக்கும் இந்த முஸ்லிம் தீவிரவாத குழுக்கள் மட்டும் உலக அமைதிக்கு அச்சுறுத்தலாக இல்லை. மாறாக, வல்லரசுகளும் அச்சுறுத்தலாக உள்ளன. மேலும் இந்த வல்லரசுகள் சுயநலன்களுக்கு முன்னுரிமை கொடுத்து உலக அமைதியை இரண்டாம் பட்சமாக கருதுகின்றன. ஒரு உண்மையான முஸ்லிம் இறைவன் ஸலாமாக இருக்கின்றான் என்பதை நன்கறிகின்றார். அவன் தனது படைப்பினத்திற்கு சாந்தியை வழங்குகின்றான் என்பதை நன்கறிகின்றார். உண்மையான முஸ்லிம்களுள் அஹ்மதி முஸ்லிம்களே அல்லாஹ் மனித இனத்திற்கு சாந்தியை வழங்குவதற்காக உலகில் அமைதியை நிலைநாட்டுவதற்காக எந்த அளவிற்கு கட்டளைகளை வழங்கி இருக்கின்றான் என்பதை நன்கு அறிந்துள்ளனர்.

அல்லாஹ் திருக்குர்ஆனில் ஓரிடத்தில் கூறுகின்றான். அதாவது அவர் கூறினார். என் இறைவா ! இந்த மக்கள் நம்பிக்கை கொள்ளவில்லை. அப்போது இறைவன் கூறினான். நபியே! நீர் அவர்களை மன்னித்து விடுவீராக. மேலும் சாந்தி உண்டாவதாக என்று மட்டுமே கூறுவீராக. அவர்கள் மார்க்கத்தின் உண்மை என்ன என்பதை விரைவில் அறிந்து கொள்வார்கள்.

அல்லாஹ் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு இந்த கட்டளையையே வழங்கினான். இஸ்லாத்தின் எதிரிகளின் அனைத்து அநீதிகளையும் கண்ட பிறகும் சகித்துக் கொண்டும் நான் உங்களுக்கு சாந்தியின் தூதுச் செய்தியை கொண்டு வந்திருக்கின்றேன் என்றே கூறும்படி இறைவன் கட்டளையிட்டான். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கே இந்த கட்டளை என்றால் பின்னர் மற்ற முஸ்லிம்களுக்கு எந்த அளவிற்கு இதில் முக்கியத்துவம் உள்ளது. நமக்கும் இன்று இதே நிலை இருக்கின்றது. நாமும் இதே கட்டளையின்படி தான் நமது தூதுச் செய்தியை எட்ட வைக்க வேண்டும். அமைதி மற்றும் சாந்தியின் தூதுச் செய்தியை பரப்புவதே நமது பணியாகும். ஒரு உண்மையான முஸ்லிம் மற்றும் ரஹ்மானின் அடியானின் அடையாளமாக அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்.

அறிவீனர்கள் அவர்களிடத்தில் சண்டையிடும் போது அவர்கள் அவர்களிடம் சண்டையிடுவதற்கு பகரமாக நாங்கள் உங்கள் மீது சாந்தி உண்டாவதற்காக துஆ செய்கின்றோம் என்று கூறி சென்று விடுவர்.

ஆக, இது தான் திருக்குர்ஆனின் போதனையாகும். இந்த போதனை தான் எல்லா மட்டத்திலும் அமைதி மற்றும் சாந்தியை நிலைநாட்டுவதற்கு மற்றும் அதற்காக முயற்சி செய்வதற்கு வழிகாட்டுகின்றது. நம்மில் ஒவ்வொருவரும் குறிப்பாக இளைஞர்கள் எந்த வகையிலும் தாழ்வு மனப்பான்மைக்கு இலக்காகி இரை ஆகிவிடக்கூடாது. இஸ்லாம் மட்டும் தான் உலக அமைதிக்கான உத்தரவாதமாக ஆக முடியும். திருக்குர்ஆன் மட்டும் தான் அமைதியை பரப்புவதற்கும் தீவிரவாதத்தை ஒழிப்பதற்கும் போதனை வழங்குகின்றது.

எனவே, இந்த போதனையின் ஞானத்தை பெறுவதற்கு ஒவ்வொருவருக்கும் அவசியம் உள்ளது. அந்த போதனையை தன்மீது செயல்படுத்த ஒவ்வொருவருக்கும் அவசியம் உள்ளது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியது போன்று நீங்கள் உங்களின் செயல் முன்மாதிரியின் மூலமாக உலகத்திற்கு கூறுங்கள். இன்று திருக்குர்ஆனின் பாதுகாப்பிற்குரிய பணிகளை செய்வதற்குரிய பாக்கியத்தை அல்லாஹ் எங்களுக்கு வழங்கியுள்ளான். இது அல்லாஹ்வின் அருளாகும். திருக்குர்ஆனிற்கு சரியான விளக்கவுரை வழங்குவதும் ஒரு வகையில் திருக்குர்ஆனின் பாதுகாப்பு பணியாகும். அதற்காக அல்லாஹ் இக்காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அனுப்பியுள்ளான். நமக்கு அல்லாஹ் அன்னாரை ஒப்புக் கொள்வதற்கான பாக்கியத்தை வழங்கி அந்த பணிக்காக நம்மை அவன் தேர்ந்தெடுத்துள்ளான். நமக்கும் பாக்கியம் வழங்கியுள்ளான். எனவே இந்த அழகிய போதனைகளை உலகில் பரப்புவதற்குரிய பணி இன்று ஒவ்வொரு அஹ்மதிக்கும் உரிய பணியாகும். இந்த பொறுப்பை நிறைவேற்றுவதற்காக ஒவ்வொரு அஹ்மதி ஆணும், பெண்ணும், இளைஞனும், இளைங்கிகளும் முயற்சி செய்ய வேண்டும். உலகம் இன்று நெருப்புக்கிடங்கின் விழிம்பில் நிற்கின்றது. எப்போது வேண்டுமென்றாலும் உலகம் அதில் விழுந்து விடுகின்ற நிலைமை ஏற்படலாம். அது போன்ற நேரத்தில் உலகத்தை அந்த நெருப்பின் கிடங்கில் விழுவதிலிருந்து பாதுகாப்பது மற்றும் அமைதியை நிலைநாட்டுகின்ற பணிகளை அஹ்மதிகளால் மட்டுமே செய்ய முடியும்.

எனவே அதற்கு முயற்சி அவசியமாகும். எல்லாவற்றையும் விட அதிகமாக அந்த நோக்கத்தை அடைவதற்கு அல்லாஹ்வுடன் சிறப்பான தொடர்பை உருவாக்கிக் கொள்வது அவசியமாகும். அவன் முன் குனிய வேண்டும். அவனுடைய தக்வாவை மேற்கொள்ள வேண்டும். அவன் மீதான அச்சத்தை உள்ளத்தில் ஏற்படுத்த வேண்டும். அப்போது தான் நாம் நமக்கும், நமது சந்ததிகளுக்கும் உலகத்திற்கும் அமைதி மற்றும் சாந்தியை நல்க முடியும். அது போன்ற சந்தர்ப்பங்கள் மற்றும் நிலைமைகள் தொடர்பாகவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு கவிதையில் கூறினார்கள். நெருப்பு இருக்கின்றது நெருப்பு. எவர்கள் அற்புதங்கள் நிறைந்த இறைவனிடம் அன்பு கொள்வார்களோ அவர்களே அந்த நெருப்பிலிருந்து பாதுகாக்கப்படுவார்கள்.

எனவே அந்த அற்புதங்கள் நிறைந்த மற்றும் அனைத்து வல்லமைகளும் நிறைந்த இறைவனிடம் தொடர்பை வலுப்படுத்திக் கொள்வதும் அவன் மீதான நேசத்தில் முன்னேறுவதும் அவசியமாகும். அதற்காக முயற்சியும் செய்யவும் வேண்டும். அல்லாஹ் தஆலா அதற்கான பாக்கியத்தை வழங்குவானாக. இறைவனின் குரலை செவிமடுப்பதற்கும் சுய சீர்திருத்தத்தை செய்வதற்கும் மேலும் அழிவின் கிடங்கில் விழுவதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கும் அல்லாஹ் உலக மக்களுக்கு பாக்கியத்தை வழங்குவானாக.

குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அவர்கள் ஒரு ஹாஜிர் ஜனாஸா மற்றும் இரண்டு காயிப் ஜனாஸாக்களின் தொழுகையை தொழ வைத்தார்கள். முதல் ஜனாஸா இனாயத்துல்லாஹ் அஹ்மதி சாஹிப் அவர்களுடையதாகும். இரண்டாவது காயிப் ஜனாஸா மதிப்பிற்குரிய மவ்லவி பஷீர் அஹ்மது சாஹிப் காலா அஃப்கானா தர்வேஷ் காதியான் அவர்களுடையதாகும். மூன்றாவது ஜனாஸா மதிப்பிற்குரிய கானித்தா பேகம் சாஹிபா அவர்களுடையதாகும். மேலும் அல்லாஹ் மர்ஹூமீன்களின் அந்தஸ்த்துகளை அல்லாஹ் உயர்த்துவதற்கும் ஹுஸூர் அவர்கள் துஆ செய்தார்கள்.

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Baithul Futuh,London – on 11.12.2015
Tamil Translation : Moulavi.Abdur Rahman Tahir Sb
Published By Nazarath Nashr-O-Isha'ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516